**செய்தி வெளியீடு எண் : 1307** **நாள் : 04.07.2023**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இன்று (04.07.2023) நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மாநில அளவிலான பள்ளி மாணவியர்களுக்கான கையுந்து பந்து போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற அணிகளுக்கு மொத்தம் ரூபாய்.13.50 இலட்சம் பரிசுத் தொகை, பதக்கங்கள் மற்றும் பரிசுக் கோப்பைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் கோப்பை – 2023 மாநில அளவிலான போட்டிகள் சென்னையில் 17 இடங்களில் ஜுலை 01–ந் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 27,000–க்கும் மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகின்றனர். இந்தப்போட்டிகள் ஜுலை மாதம் 25–ந்தேதி வரை நடைபெறவுள்ளது.

சென்னை நேரு உள்விளையாட்டரங்கத்தில் பள்ளி மாணவ – மாணவியர்களுக்கான கையுந்து பந்து போட்டிகள் ஜுலை 1 – முதல் தொடங்கி இன்று வரை நடைபெற்றது. நாக் அவுட் மற்றும் லீக் முறையில் நடைபெற்ற இப்போட்டியில் 38 – மாவட்டங்களை சேர்ந்த அணிகள் பங்கேற்றன. இன்று (04.07.2023) நடைபெற்ற கையுந்து பந்து பெண்கள் பிரிவு இறுதிப் போட்டியில் சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, மற்றும் சென்னை அணிகள் விளையாடின. இதில் சேலம் அணி முதல் இடத்தையும், சென்னை அணி இரண்டாம் இடத்தையும் , ஈரோடு அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இன்று (04.07.2023) நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மாநில அளவிலான பெண்கள் பிரிவு கையுந்து பந்து போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற அணிகளுக்கு மொத்தம் ரூபாய்.13.50 இலட்சம் பரிசுத் தொகை, பதக்கங்கள் மற்றும் பரிசுக் கோப்பைகளை வழங்கினார்.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான கையுந்து பந்து போட்டியினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் சிற்றுண்டி மற்றும் உணவு பரிமாறும் கூடத்தினை பார்வையிட்டு மாணவ – மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவின் தரம் குறித்து ஆய்வு செய்து உணவினை ருசித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி. இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் இன்று (04.07.2023) நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான கையுந்து பந்து இறுதிப் போட்டியில் சென்னை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்ட அணிகள் நாக் அவுட் மற்றும் லீக் முறையில் விளையாடின. இந்தப் போட்டியில் சென்னை அணி முதல் இடத்தையும், கோயம்புத்தூர் அணி இரண்டாம் இடத்தையும் , திருநெல்வேலி அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன. வெற்றி பெற்ற அணி மற்றும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை, பதக்கங்கள் மற்றும் பரிசுக் கோப்பைகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் வழங்கினார்கள்.

**இந்தப் போட்டிகளில் முதல் இடம் பெறுகின்ற அணியை சேர்ந்த 12 – வீராங்கனைகளுக்கு தலா ரூபாய். 50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூபாய்.6.00 இலட்சம், இரண்டாம் இடம் பெறுகின்ற அணியை சேர்ந்த 12 – வீராங்கனைகளுக்கு தலா ரூபாய்.37,500 வீதம் ரூபாய்.4.50 இலட்சம் மற்றும் மூன்றாம் இடம் பெறுகின்ற அணியை சேர்ந்த 12 – வீராங்கனைகளுக்கு தலா ரூபாய்.25 ஆயிரம் வீதம் ரூபாய். 3 இலட்சம் ஆக மொத்தம் ரூபாய்.13.50 இலட்சம் வழங்கப்படுகிறது.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in